(இ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் கோருவார்.

மாண்புமிகு கல்வியமைச்சர்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்..
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்உப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

---

*1991 ஜூலை 12 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 20/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கோருவார்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

---

* 1991 ஜூலை 11 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.